03.09.2026 OS.No.121/2024 PW1 Name :.**வெங்கடேசன்**

குறுக்கு விசாரணை

1. எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் பணம் வாங்குவதற்காக வழக்கு தாக்கல் செய்தேன். கடன் கொடுத்ததற்கு ஆதாரமாக பாண்டை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்கிறேனா என்றால் சரி அதற்காக தான் தாக்கல் செய்தேன். என்னிடம் வாங்கிய கடனுக்கு பிரதிவாதி மாத மாதம் வட்டியை சரியாக செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு வட்டி செலுத்தியதற்கு நான் வரவு வைத்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.
2. என்னிடம் வாங்கிய கடன் தொகைக்கான வட்டியை அரிகிருஷ்ணன் முழுவதும் அடைத்துவிட்டார் என்றாலும் இன்றைய தேதிவரை எந்த தொகை இல்லை என்றாலும் சரியல்ல. நான் கடன் தொகை முழுவதும் அடைத்தபிறகும் பாண்டினை பிரதிவாதி அரிகிருஷ்ணன் கொடுக்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வா.சா.ஆ1 ஆவணமான நான் கொடுத்த கடனுக்கு ஆதாரமாக வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலத்தில் எழுதி பதிவு செய்யபட்டது என்றால் சரி.
3. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலும் பிரதிவாதி அரிகிருஷ்ணனிடம் பணத்தை கேட்டு தான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரி. பிரதிவாதி தரப்பில் என்ன பதில் அறிவிப்பு கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு நீதிமன்றத்திலிருந்து

அழைப்பாணை வந்த பிறகு தான் அவரை ஏமாற்றி வா.சா.ஆ.1 ஆவணத்தில் அவரிடம் கையெழுத்து பெற்ற விவரம் தெரிய வந்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 அக்கிரிமெண்ட் ஆவணம் பிரதிவாதி எழுதி கொடுக்கவில்லை என்றாலும் நானே போலியாக அந்த ஆவணத்தை தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.1 அக்கிரிமெண்ட் பத்திரத்தை எழுதிய பத்திர எழுத்தர் யார், அதனை தட்டச்சு செய்தது யார், அதில் சாட்சி கையெழுத்து போட்டது யார் என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரி. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விவரம் என்ன எழுதியிருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சொத்தின் சர்வே எண், அதன் நான்கு புற எல்லைகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி ஏமாற்றி இந்த ஆவணம் நானாக எழுதியதால் இந்த வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் எழுதிகொடுக்கவில்லை என்று பதில் அறிவிப்பில் போட்டிருக்கிற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மீதி தொகை செலுத்துவதற்காக நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் காத்திருந்தேன் என்ற என் வாதத்தை நிரூபணம் செய்வதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன்.

6. என்னிடம் காட்டபடும் என்னால் தாக்கல் செய்யபட்ட ஆவணங்களில் நான் சொல்வது போன்று நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் காத்திருந்த சமயத்தில் சாட்சி கையொப்பம் செய்யபட்ட ஆவணத்தை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் எதுவும் இல்லை. பிரதிவாதி அவர்

எழுதிகொடுத்த ஆவணத்தை 72 மணி நேரத்தில் திருப்பி கொடுக்கவேண்டும் என்று பதில் அறிவிப்பு கொடுத்த பிறகும் அந்த ஆவணத்தை நான் திருப்பி தரவில்லை என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. பிரதிவாதி அவர் வாங்கிய கடன் தொகையை அடைத்துவிட்டார் என்றாலும் அவருக்கும் எனக்கும் எந்த வித லேவாதேவியும் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 03/09/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

Sd/xxx
சார்பு நீதிபதி
வாணியம்பாடி.